**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.480/2024**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 16-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.P.கோவிந்தசாமி, பலகை எழுத்தர் நிலை -II அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

பெயர் -திரு.ஹரிஹரன் PW-6 தொழில் -

த/க பெயர் - வயது -

அலைபேசி - முகவரி -

ஆதார் எண் -

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>-**

நான் தற்பொழுது கஸ்பா பேட்டை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் உதவி மின் பொறியாளர் பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்த தேதி ஞாபகம் இல்லை 2019 அல்லது 2020 ஆம் வருடம் இருக்கும் ஒருநாள் இரவு காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து கொலாங்காட்டு வலசு ஈரோட்டில் இருந்து போகும்போது இடது பக்கத்தில் வாய்க்கால் கரை ஓரமாக இருந்த மின் கம்பம் மீது கார் மோதி கீழே விழுந்து விட்டதாக தகவல் தெரிவித்தார்கள். அதன் பின்பு அந்த சேதாரத்திற்கான

Dr.V.Sree Vidya Date: 2026.07.16 18:34:15 +0530

பணத்தை வசூல் செய்து விட்டு மறுநாள் காலையில் கட்டி விட்டேன், வண்டி இடித்தவரிடம் சேதாரத்திற்கான தொகையை வாங்கினேன், ரூபாய் 13,000/- சேதாரத்திற்காக வாங்கினேன். அதற்கான ரசீதை நான் அவரிடமே கொடுத்து விட்டேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

நான் தனிப்பட்ட முறையில் ஆய்வறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya Date: 2026.07.16 18:34:21 +0530

Chief Judicial Magistrate,
Erode.